**உதவி அமர்வு நீதிமன்றம், உசிலம்பட்டி**

முன்னிலை: திரு.R. பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.,
உதவி அமர்வு மற்றும் சார்பு நீதிபதி, உசிலம்பட்டி
2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண். 182/2025**

(குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II)
உசிலம்பட்டி அவர்களால்
மேல்விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டது)
முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.16/2024
*****

| | |
|---|---|
| தமிழக அரசுக்காக | உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையக் குற்ற எண்.113/2024 காவல் ஆய்வாளர் மூலமாக. |
| எதிரியின் பெயர் | கணேஷ்வரி, க/பெ. பாலச்சந்திரன் |

**எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள்**

| | |
|---|---|
| குற்றச்சாட்டு | எதிரி இதச பிரிவு 307-ன் கீழ் |
| எதிரியின் பதிலுரை | குற்றவாளி அல்ல |
| தீர்ப்பு | முடிவாக, எதிரி மீதான இதச பிரிவு 307-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி மேற்கண்ட பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியைக் கு.வி.மு.ச.பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பு 11.08.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்குரைஞர் திரு.R. ராஜசேகர் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M. விக்னேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும்

வழக்குரைஞர்களின் வாதங்களை கேட்டும், முன்னிடப்பட்ட சாட்சியங்கள், சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரையில் என் பரிசீலனையின் கீழ் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.........

<u>**தீர்ப்புரை**</u>

உத்தப்பநாயக்கனூர் காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் சுருக்கம் வருமாறு,

இவ்வழக்கின் புகார்தாரரும் சாட்சி 1ஆன காயம்பட்ட பாலச்சந்திரன் என்பவர் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, அய்யனார்குளத்தில் குடும்பத்துடன் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறார். சாட்சி 1ன் மனைவியும், எதிரியுமான கணேஷ்வரி என்பவர் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, பாப்பாபட்டி அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். சாட்சி 1 அடிக்கடி மது குடித்துவிட்டு வீட்டிற்கு வருவதால் சாட்சி 1க்கும் எதிரியான அவரது மனைவிக்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 08.06.2024ம் தேதி இரவு சாட்சி 1 குடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது அவருக்கும், அவரது மனைவிக்கும் வாய்தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது எதிரியானவர் சாட்சி 1யைப் பார்த்து தினமும் குடித்துவிட்டு வருவதே உனக்கு வேலை உன்னால எனக்கு தான் பிரச்சனை உன்னைக் கொன்றால்தான் நான் நிம்மதியாக இருக்க முடியும் என்று சத்தம்போட்டதை சாட்சி 1 வழக்கம் போல் பேசுகிறாள் என்று நினைத்து துாங்க சென்றுள்ளார். இரவு சுமார் 11 மணியைப் போல் சாட்சி 1 துாங்கிக் கொண்டிருந்த போது எதிரியானவர் வீட்டில் இருந்த மீன்வெட்டும் கத்தியை எடுத்து தேவிடியா மகனே அவுசாரி மகனே என்று சத்தம்போட்டு இத்தோடு

செத்து தொலைடா என்று சொல்லி சாட்சி 1ன் தலையின் வலதுபுறம், இடதுபுற கண்ணம், இடது பக்க தோல்பட்டை, இடது கை மணிக்கட்டு, இடது பக்க முன்கை, வலது கை நடுவிரல், வலது பக்க காது மற்றும் வலது கழுத்து பகுதிகளில் மாறி மாறி வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்ததாக எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b), 307, 506(ii)–ன்கீழ் உத்தப்பநாயக்கனூர் காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** மேற்கண்டவாறு இறுதி அறிக்கையானது, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி நீதிமன்றத்தில் முதல் நிலைப்பதிவேட்டு வழக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**3.** மேற்படி நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜரானதும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் யாவும் 207–ன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

**4.** எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கப்படத்தக்கது என்பதால் அவர் மீதான வழக்கானது குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II அவர்களால் கு.வி.மு.ச.209 பிரிவின்படி மதுரை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு Committal செய்து உத்தரவிடப்பட்டது.

**5.** மேற்கண்டவாறு Committal செய்யப்பட்ட வழக்கானது மதுரை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களால் கோப்பில் எடுக்கப்பட்டு விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதின் பேரில் இந்நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

**6.** எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இருதரப்பு வாதம்

கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டுஎதிரி மீதான இதச பிரிவு 307–ன்கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்துரைத்தார். அதன் பின்னர் அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

**<u>7. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>**

7.1 இவ்வழக்கில் காயம்பட்ட நபரான அ.சா.1 பாலச்சந்திரன் அவரது சாட்சியத்தில், ஆஜர் எதிரி அவரது மனைவி என்றும், எந்த தேதி என்ன நடந்தது என்ற விபரம் அவருக்கு ஞாபகம் இல்லை என்றும், புகார் அவர் தான் கொடுத்தார் என்றும், அதில் உள்ள அ.சா.ஆ.1 கைரேகை அவருடையது தான் என்றும், அவரது மனைவி பெயரில் உள்ள கோவத்தின் காரணமாக புகார் அளித்தார் அதில் உள்ள விபரம் தெரியாது என்றும், போலீஸ் அவரை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ளார்.

7.2 அரசு தரப்பில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 சிட்டம்மாள் அவரது சாட்சியத்தில், அவருக்கு கண்பார்வை சரியாக தெரியவில்லை என்றும், அதனால் எதிரி யார் என்று தெரியவில்லை என்றும், அ.சா.1 அவரது மகன் என்றும், சம்பவம் பற்றி அவருக்கு எதுவும் தெரியாது என்றும், புகாரில் உள்ள அ.சா.ஆ.2 அறிவேன் சாட்சி கையெழுத்து அவருடையது தான் என்றும், எதற்காக போட்டேன் என்று தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்துப்போட்டார் என்றும், போலீஸ் அவரை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ளார்.

7.3 மேலும், அரசு தரப்பில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.3 சுப்பு மற்றும் அ.சா.4 பிரபாகரன் ஆகியோர் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக போலீசார்

அவரை விசாரிக்கவில்லை என்று சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ளார்கள்.

7.4. அ.சா.5 நிருபன் சக்கரவர்த்தி அவரது சாட்சியத்தில், அத்தாட்சியில் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அவருடையது இல்லை என்றும், அவருக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக போலீசார் அவரை விசாரிக்கவில்லை என்று சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியுள்ளார்.

7.5 அ.சா.6 சுரேந்திரகுமார் அவரது சாட்சியத்தில், அவர் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார் என்றும், கடந்த 09.06.2024ம் தேதி உசிலம்பட்டி வட்டக்காவல் ஆய்வாளராக பணிபுரிந்த திரு. ஆனந்த் என்பவர் உத்தப்பநாயக்கனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் என்பவர் அன்று நிலைய பொறுப்பில் இருந்தபோது உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் இருந்த அய்யனார்குளத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் என்பவர் மூலம் கொடுத்த புகாரினைப் பெற்று அன்று காவல் நிலையம் வந்து காலை 6.00 மணிக்கு உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையம் குற்ற எண்.113/2024 சட்டப்பிரிவுகள் 294(b), 307, 506(ii) இதசபடி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அ.சா.ஆ.4 முதல் அறிக்கையின் அசல் மற்றும் அ.சா.ஆ.3 புகார் மனுவினை இணைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்பு விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. ஆனந்த் அவர்களுக்கு அனுப்பி வைத்த வழக்கு கோப்பினைப் பெற்று காலை 7.30 மணிக்கு சம்பவ இடமான அய்யனார்குளம் சென்று சாட்சிகள் அறிவு, சதீஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம், அ.சா.ஆ.6 பார்வை மகசர் தயார்

செய்துள்ளார் என்றும், பின்பு சம்பவ சாட்சிகள் காயம்பட்டி நபர் பாலச்சந்திரன், சுப்பு, சிட்டம்மாள், பிரபாகரன், ஜெயராஜ் ஆகியோர்களைத் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு சாட்சிகளின் விசாரணையில் இருந்தும், அவரது ரகசிய விசாரணையிலும், சம்பவம் உண்மை என தெரிந்ததால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி கணேஷ்வரி தேடிச்சென்று எதிரியானவர் சொக்கத்தேவன்பட்டி அவரது அம்மா பாண்டியம்மாள் வீட்டில் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்துள்ளார் என்றும், எதிரியானவர் தானாகவே குற்றத்தை ஒப்புக்கொண்டு சம்பவம் பற்றி எவ்வித அச்சுறுத்தல் ஆசைவார்த்தையின்றி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன்வந்ததால் சாட்சிகள் தீலிபன், நிருபண் சக்கரவர்த்தி ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 என்றும், பின்பு ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியபடி வாதியை வெட்டுவதற்கு பயன்படுத்திய ஆயுதமான மீன்வெட்டும் கத்தி மற்றும் அவர் உடுத்திருந்த பச்சை மற்றும் கருப்பு நிறம் கலந்திருந்த நைட்டி ஆகியவற்றை சம்பவ இடமான வீட்டிற்கு முன்புறம் உள்ள துளசி செடியில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்துள்ளார் என்றும், அதை சாட்சிகள் தீலிபன், நிரூபண் சக்கரவர்த்தி ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.8 அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார் என்றும், எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியைப் பெண் காவலர்கள் மூலம் திரேக பரிசோதனை நிலையம் பாராவசம் ஒப்படைத்தும், பின் எதிரியை நீதிமன்ற காவலிற்கு உட்படுத்த ஆவணங்கள் தயார் செய்து, சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், வழக்கின் சம்பந்தப்பட்ட சொத்துக்களை அ.சா.ஆ.9 படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு

அனுப்பி வைத்துள்ளார் என்றும், மீன் வெட்டும் கத்தி சா.பொ.1, பச்சை மற்றும் கருப்பு நிறம் கலந்திருந்த நைட்டி சா.பொ.2, நவாபழக்கலர் உள்பாவாடை ஒன்று சா.பொ.3, இரத்தக்கறை படிந்த காவி நிற வேட்டி சா.பொ.4 இரத்தக்கறை படிந்த கருநீல நிற பனியன் சா.பொ.5 என்றும், பின்பு காயம்பட்ட வாதிக்கு முதலுதவி சிகிச்சையளித்த உசிலம்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் டாக்டர் வித்யா அவர்களை விசாரித்து விபத்து பதிவேடு பெற்றுள்ளார். மேல்சிகிச்சையளித்த மதுரை மீனாட்சிமிஷன் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் சுரேஷ்குமார் அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார் என்றும், அந்த விபத்து பதிவேடுடன் சேர்ந்த காயச்சான்று அ.சா.ஆ.10 என்றும், பின்பு விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள் 294(b), 307, 506(ii) இதசபடி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**8.** எதிரிக்கு எதிரான சாட்சியங்களைத் தொகுத்து எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ) பிரிவின்கீழ் வினவியபோது, எதிரி அதனை பொய் சாட்சியம் என்று மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**9.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொருட்கள் சா.பொ.1 முதல் சா.பொ.5 வரையிலானவைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை.

**10.** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதேயாகும்.

**<u>11. பரிசீலனை:–</u>**

**11.1.** முதலாவதாக, வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான இதச பிரிவு 307–ன்படி குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யும் விதமாக அரசு தரப்பில் மொத்தம் 13 சாட்சிகள் பட்டியலிடப்பட்டு இந்நீதிமன்றத்தில் 6 சாட்சிகள் முன்னிலையாகி சாட்சியம் அளித்துள்ளார்கள். இவ்வழக்கின் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது, சாட்சி 1 மது குடித்துவிட்டு வருவதால் சாட்சி 1க்கும், அவரது மனைவிக்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டதில் கடந்த 08.06.2024ம் தேதி இரவு சாட்சி 1 துாங்கிக்கொண்டிருந்த போது எதிரி வீட்டில் இருந்த மீன்வெட்டும் கத்தியை வைத்து வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாக எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 307, 506(2) –ன்படி உத்தப்பநாயக்கனுார் காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**11.2.** அ.சா.1 அவரது முதல் விசாரணை சாட்சியத்தில் மனைவியின் மீது இருந்த கோவத்தில் புகார் அளித்துவிட்டதாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 அவரது முதல் விசாரணை சாட்சியத்தில் அ.சா.ஆ.2 அறிவேன் சாட்சி கையெழுத்து அவருடையது தான் என்றும், எதற்காக போட்டேன் என்று தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து போட்டேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்கள்.

**11.3** அ.சா.3 மற்றும் 4 வரையிலான சாட்சிகள் அவர்களது முதல் விசாரணை சாட்சியத்தில் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்கள். அதேபோல் அ.சா.5 அவரது முதல் விசாரணை சாட்சியத்தில் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து அவருடையது இல்லை என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சாட்சி 1ஆன அ.சா.1ற்கு சிகிச்சை அளித்த

மருத்துவர் சுரேஷ்குமார் அவர்களை சாட்சியாக விசாரிக்கப்படவில்லை.

**11.4.** இந்நிலையில், இவ்வழக்கின் முக்கிய சாட்சிகள் பிறழ்சாட்சியாக மாறியதால் மட்டும் எதிரிக்கு விடுதலை அளிக்க முடியாது என்ற போதிலும் இந்த வழக்கில் சம்பவத்தை உறுதி செய்யும் விதமாக மற்றச் சாட்சிகளும் சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலானவர்கள் சம்பவம் குறித்தும், சம்பவத்தில் ஏற்பட்ட காயம் குறித்தும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.6 வட்ட காவல் ஆய்வாளர் சாட்சியத்தை மட்டுமே கருத்தில் கொண்டு எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக எடுக்க முடியாது. காயம்பட்ட நபர் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையில் விசாரணை அதிகாரியின் சாட்சியம் மட்டும் வைத்து சம்பவத்தை உறுதிபடுத்தும் சாட்சிகள் இன்றி சந்தேகத்திற்கு இடமின்றி எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டதாக கொள்வது சட்ட நீதிக்கு முரணானதாக அமையும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. சந்தேகத்தின் பலன் எதிரிக்கு அளிக்க வேண்டும் என்பது தான் தீர்மானிக்கப்பட்ட சட்டமாக உள்ளது. இந்த வழக்கில் முக்கிய சாட்சிகளும், மற்ற சாட்சிகள் யாரும் அரசு தரப்பு வழக்கை உறுதிசெய்து சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையும்.

**12.** எனவே, எதிரி மீதான இதச பிரிவு 307–ன் கீழான குற்றச்சாட்டைப் பொறுத்து அரசு தரப்பில் எவ்வித அடிப்படை சாட்சியமும், முகாந்திரமும் சொல்லப்படவில்லை என்பதைப் பார்க்கும் போது எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, எதிரி மீதான இதச பிரிவு 307–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி மேற்கண்ட பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியைக் கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

ஆர்.பி.ஆர்.எண்.03/2026–ல் கைப்பற்றப்பட்ட மீன் வெட்டும் கத்தி சா.பொ.1, பச்சை மற்றும் கருப்பு நிறம் கலந்திருந்த நைட்டி சா.பொ.2, நவாபழக்கலர் உள்பாவாடை ஒன்று சா.பொ.3, இரத்தக்கறை படிந்த காவி நிற வேட்டி சா.பொ.4 இரத்தக்கறை படிந்த கருநீல நிற பனியன் சா.பொ.5 ஆகியவை பயனற்றது என்பதால் மேல்முறையீடு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13–ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RENGANATHAN BARATHIRAJA
Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.13 10:29:47 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா.1 பாலச்சந்திரன்
அ.சா.2 சிட்டம்மாள்
அ.சா.3 சுப்பு
அ.சா.4 பிரபாகரன்
அ.சா.5 நிரூபண் சக்கரவர்த்தி
அ.சா.6 சுரேந்திரகுமார் (காவல் ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள கைரேகை
அ.சா.ஆ.2 புகாரில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து

அ.சா.ஆ.3 புகார் மனு
அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.5 பார்வை மகசர்
அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம்
அ.சா.ஆ.7 ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி
அ.சா.ஆ.8 அத்தாட்சி
அ.சா.ஆ.9 படிவம் 91
அ.சா.ஆ.10 விபத்து பதிவேடுடன் சேர்ந்த காயச்சான்று

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :-**

சா.பொ.1 மீன் வெட்டும் கத்தி
சா.பொ.2 பச்சை மற்றும் கருப்பு நிறம் கலந்திருந்த நைட்டி
சா.பொ.3 நவாபழக்கலர் உள்பாவாடை ஒன்று
சா.பொ.4 இரத்தக்கறை படிந்த காவி நிற வேட்டி
சா.பொ.5 இரத்தக்கறை படிந்த கருநீல நிற பனியன்

**எதிரி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-**

--- இல்லை ---

RENGANATHAN BARATHIRAJA
Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.13 10:30:17 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.

**இணைப்பு :-**

1) இவ்வழக்கு விசாரணையின் பொழுது எதிரி பிணையில் இருந்தார்.

2) சாட்சிகள் எவரும் மூன்று தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3) தீர்ப்பு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

உதவி அமர்வு நீதிமன்றம்,

உசிலம்பட்டி.

அமர்வு வழக்கு எண்.182/2025

சீரான / வரைவு / தீர்ப்புரை

நாள்:- 13.08.2026